தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 23.07.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## தேசிய சேவைத் திட்டம் (NSS) சிறப்பு முகாமின் தொடக்கவிழா – 2025
## "எங்களுக்கு அல்ல... உங்களுக்காக!"

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித்திட்டப்பிரிவு தொடர்ந்து ஊரக சேவை மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. மாணவர்கள் சுகாதாரம், தூய்மை, சுற்றுச்சூழல் மற்றும் சமூக விழிப்புணர்வு செயல்களில் ஈடுபட ஊக்குவிக்க ஆண்டு தோறும் சிறப்பு முகாம்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் நடத்தப்படுகின்றன.

"நான் அல்ல... நீங்கள்" என்ற கருப்பொருளில், கோயம்புத்தூர் மாவட்டத்தின் தென்கரை பகுதியில் உள்ள குப்பனூர், செல்லப்பகவுண்டன்புதூர், கரடிமடை, மத்திபாளையம், சேனாவூர் மற்றும் தென்கரை ஆகிய 6 கிராமங்களை உள்ளடக்கிய நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் நாட்டு நலப்பணித்திட்டம் 2025 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் தேதி தொடங்கப்பட்டது.

துவக்கவிழாவில் வரவேற்பு உரையை நாட்டுநலப்பணித்திட்ட மாணவ தன்னார்வலர் இரா. யுவஸ்ரீ வழங்கினார். தொடக்க உரையை முனைவர். முத்துலட்சுமி, பேராசிரியர் (மாணவர் நல மையம்), அவர்கள் வழங்கினார். அவரது உரையில் தன்னலமற்ற சேவை, நாட்டை மேம்படுத்துதல் மற்றும் மாணவர்கள் ஈடுபடுவதன் முக்கியத்துவம் எடுத்துரைக்கப்பட்டது. பேராசிரியர் மற்றும் பழவியல் துறைத்தலைவர் முனைவர் ஆக்ஸில்லா, இந்திய இளைஞர்களைப் பற்றிய சிந்தனையை மேற்கோள்காட்டி, மாணவர்களை செயல்படத் தூண்டினார்.

கிராமத் தலைவர் திருமதி. K. மகாலட்சுமி பிரசாந்த் மாணவர்களுக்கு சுத்திகரிப்பு கருவிகளை வழங்கி முகாமைத் திறந்து வைத்தார். மாணவர் நல மையத்தின் முதன்மையர் J.ராமலிங்கம், அவர்கள் குழுப்பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி விழாவைத் தொடக்கி வைத்தார்.

தேசிய சேவை திட்ட சிறப்பு முகாம் மாணவ தன்னார்வலர் திரு. டி. கே. திருகுமாரன் வழங்கி, நிகழ்ச்சியின் வெற்றிக்கு பங்களித்த ஊராட்சி தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்.

இந்த முகாமில் 664 மாணவ தேசிய சேவை திட்ட சிறப்பு முகாம் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர். கிராம மக்கள் மாணவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று, முகாம் காலத்தில் இணைந்து செயல்படத் தயாராக இருந்தனர்.

மாவட்டத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் இளைஞர்கள் தலைமையிலான பல்வேறு ஊரக மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு துவக்கத்தை அளித்தது.

***மக்கள் தொடர்பு அலுவலர்***